செய்தி வெளியீடு எண்:508 நாள் :20.09.2013

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தென்னிந்தியத் திரை உலகத்தின் முதல் பெண் இயக்குநர், முதல் பெண்படத் தயாரிப்பாளர், நடிகை டி.பி. ராஜலட்சுமி அவர்களின் நூற்றாண்டு விழா இன்று (19.09.2013) மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு.ப.தனபால் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் முன்னிலையுரை வழங்கினார். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் திரு. ஆர். சரத்குமார், திரைப்பட நடிகர் திரு. சிவக்குமார், திரைப்பட இயக்குநர் திரு ஆர்.வி. உதயகுமார் மற்றும் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத் தலைவர் திரு தேவா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். நிகழ்ச்சியின் நிறைவாக செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

**மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் பேசியதாவது:**

இன்று ஒரு சரித்திர நாயகியாக விளங்கிய டி.பி. ராஜலட்சுமி அவர்களுக்கு .தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் நடத்தும் விழா இந்த நுற்றாண்டு விழா. 80 ஆண்டுகளுக்கு முன்பு திரையுலகம் எப்படி இருந்திருக்கும் என்றால், தெருக்கூத்தாக ஆரம்பித்து, பின்னர் நாடகமாக பரிணாமம் பெற்று, பின்னர் திரைப்படமாக உருவாகி இருக்கிறது. நடிகை டி.பி. ராஜலட்சுமி அவர்கள் பேசாத படம் மற்றும் முதல் பேசும் படத்தில் நடித்த பெருமையைக் கொண்டவர். அக்காலத்தில் நடிப்பதற்கு வரவேண்டுமென்றொல் மிகவும் தைரியசாலியாக இருக்க வேண்டும். எனவே அது மாதிரி தைரியசாலி வீராங்கனைக்கு நூற்றாண்டு விழா நடத்துவது என்பது இன்னொரு தைரியமான ஒருவரால் தான் முடியும். அது போன்ற தைரியமும் துணிச்சலும் மிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மட்டுமே இது முடியும்.

பெண்கள் முன்னேற்றத்திற்காக பாடுபடக் கூடியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். எனவே தான் நாட்டுக்காக உழைத்த நாட்டின் விடுதலைக்காக பல கருத்துக்களை திரைப்படம் மூலமாக கூறிய நடிகை டி.பி. ராஜலட்சுமி அவர்களுக்கு அம்மா அவர்கள் நூற்றாண்டு விழா எடுத்திருக்கிறார்கள்.

தென்னிந்திய திரைப்பட விழாவை நடத்துவதற்கு மொத்த செலவு 30 கோடி. இதில் மூன்றில் ஒரு பங்கு அதாவது 10 கோடி அம்மா வழங்கியுள்ளார். இதன் மூலம் கலையுலகத்தின் மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வைத்துள்ள பற்று நன்றாக தெரியும் என்று தெரிவித்தார்.

வருங்காலம் முதலமைச்சர் அம்மா அவர்கள் காலம் எனக் கூறி எல்லோருக்கும் நன்றியைத் தெரிவித்து உரையை நிறைவு செய்தார்.

**மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு ப. தனபால் அவர்கள் பேசியதாவது:**

தென்னிந்திய திரை உலகின் முதல் பெண் இயக்குநர், முதல் பெண்படத் தயாரிப்பாளர், நடிகை டி.பி. ராஜலட்சுமி அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு தலைமையுரையாற்ற வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருமதி டி.பி. ராஜலட்சுமி திரை உலகிற்கு அவர்கள் ஆற்றிய பணி பாராட்டுக்குரியது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியிலே பெண்களுக்காக எண்ணற்ற திட்டங்கள் பெண் விடுதலை, பெண் உரிமை மற்றும் பெண்களுக்காக அனைத்து துறைகளிலும் எண்ணற்ற திட்டங்களை அறிவித்து வருபவர் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். மங்கையருக்கு மண உதவி, தாலிக்கு தங்கம், பெண்களுக்கு வேலைப்பளு குறைக்கும் நோக்கில் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி, ஆண்களுக்கு நிகர் பெண்கள் எனும் அடிப்படையில் மகளிர் காவல் நிலையங்கள், பெண் கமான்டோ போன்று பெண்களுக்கு சிறப்பு உண்டாக்கும் வகையில் திகழ்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள். உழைப்போருக்கு உயர்வு உழைத்து உயர்ந்த திருமதி டி.பி. ராஜலட்சுமி அவர்களுக்கு அரசு சார்பில் நூற்றாண்டு விழா உத்தரவிட்டது என சொல்லிக்கொண்டே போகலாம். திரைப்படத் துறையில் விருதுகள், நினைவுப் பரிசு, சான்றிதழ்கள் போன்று திரைப்படத் துறை, மற்றும் சின்னத்திரை நடப்பவர்களுக்கும் விருதுகள், திரைப்படத் துறையினருக்கு நல வாரியம் அமைத்து பல்லாயிரம் உறுப்பினர்களைக் கொண்ட இந்த திரைப்படத் துறைக்கு பல்பேறு சலுகைகள் வழங்கியுள்ளவர் மாண்புமிகு அம்மா அவர்கள் எனத் தெரிவித்தார்.

நிகழ்ச்சியின் நிறைவாக, கலைமாமணி ஸ்ரீரங்கம் ரேவதிமுத்துஸ்வாமி குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9